# பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களுக்கு இணைய வழி மூலம் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்க கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அறிவுரைகள்

**அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கான கல்வி கட்டணம் (வருமான வரம்பின்றி) :** Head of Account AH 0916

அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களிடமிருந்து பெற்றோர் / பாதுகாவர் ஆண்டு வருமான வரம்பு கணக்கில் கொள்ளாமல் (irrespective of income limit) கல்விக் கட்டணம் (Tuition Fee) வசூலிக்கக் கூடாது. அக்கட்டணங்களை கணக்கிட்டு அந்தந்த கல்வித் துறை (DOTE, DOCE, DME, SCERT, DIMH) க்கு மாணாக்கர்களின் விவரங்களை கல்வி நிறுவனங்கள் அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் கல்விக்கட்டண விவரங்களை ஒருங்கிணைத்து சம்மந்தப்பட்ட கல்வித்துறைத் தலைவர்களால் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திற்கு பரிந்துரைத்து அனுப்பப்பட வேண்டும். அக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அந்தந்த கல்வித் துறை மூலம் ஆதிதிராவிடர் நலத்துறையால் ஈடு செய்யப்படும்.

**அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கான கல்வி உதவித்தொகை (வருமான வரம்பிற்குள்) :** Head of Account SA1224 / KM 1228 / SA 1223 / JZ 1222 / AV 1220

அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் (SC/ST) இன மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள்ளும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் (SCC) மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருப்பின் அம்மாணவர்கள் கல்லூரிகளுக்கு செலுத்தக்கூடிய கட்டாய மற்றும் திருப்பி செலுத்தப்படாத கட்டணங்களுடன் பராமரிப்புப்படியும் சேர்த்து (பராமரிப்புப்படி அம்மாணவர்கள் எடுக்கும் பிரிவு மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் தங்காது பயில்வதற்கு ஏற்ப இணைய வழி மூலமாகவே கணக்கிட்டு) கல்வி உதவித் தொகையாக மாணவர்களின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படுகிறது.

**அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி / சுய ஆதரவு பிரிவில் பயிலும் மாணாக்கர்களுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள்: Head of Account – SA1224/KM 1228 / SA 1223 / JZ 1222 / AV 1220**

அரசு /அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி / சுய ஆதரவு பிரிவுகளுக்கும் (Self finance / Self Supporting) நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கும் (Deemed University) சுயநிதி கல்லூரிகளுக்கான சுயநிதி கட்டணக்குழு / அரசு கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்படாததால், அரசு / அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்கு ஈடான கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

அரசு / அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் Regular Courseல் பயிலும் மாணவர்களுக்கு இணைவழியில் பதியப்படும் முறையிலேயே இம்மாணவர்களுக்கும் பதியப்பட வேண்டும்.

மேற்கண்ட கல்வி உதவித்தொகை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் பட்டுவாடா செய்யப்படும்.

**மாநில சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டம் – பட்டப்படிப்பு (UG) பயிலும் மாணாக்கர்கள் (வருமான வரம்பின்றி): Head of Account – JS1227**

மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டத்தின்கீழ் பயனடையாத அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் (Govt / Govt Aided) கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்/மாணவியர்களுக்கு ஆண்டு வருமான வரம்பை கணக்கிற் கொள்ளாமல் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தக்கூடிய சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்களை (Special Fee and Exam Fee) மாநில அரசு இலவச கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் மாணவர்களின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படும்.

**மாநில சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டம் – முதுகலை பட்டப்படிப்பு (PG) பயிலும் மாணவியர்களுக்கு மட்டும் (வருமான வரம்பின்றி): Head of Account – KK 1222**

மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டத்தின்கீழ் பயனடையாத அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் (Govt / Govt Aided) கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு மட்டும் அவர்களது பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பை கணக்கிற் கொள்ளாமல் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தக்கூடிய சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்களை (Special Fee and Exam Fee) மாநில அரசு இலவச கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் மாணவர்களின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படும்.

**அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழக உறுப்பு கல்லூரி (Regular Course): Head of Account – SA1224 / KM 1228 / SA 1223 / JZ 1222 / AV 1220**

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் உள்ள வழக்கமான பிரிவில் (Regular course) பயிலும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய மாணவர்கள் கல்லூரிகளுக்கு செலுத்தக்கூடிய கட்டாய மற்றும் திருப்பி செலுத்தப்படாத கட்டணங்களுடன் பராமரிப்புப்படியும் சேர்த்து (பராமரிப்புப்படி அம்மாணவர்கள் எடுக்கும் பிரிவு மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் தங்காது பயில்வதற்கு ஏற்ப இணைய வழி மூலமாகவே கணக்கிட்டு) கல்வி உதவித் தொகையாக மாணவர்களின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படும்.

**அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழக உறுப்பு கல்லூரி** (Self finance / Self Supporting) **Head of Account – SA1224 / KM 1228 / SA 1223 / JZ 1222 / AV 1220**

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் உள்ள சுயநிதி / சுய ஆதரவு பிரிவுகளில் (Self finance / Self Supporting) பயிலும் மாணவர்களுக்கு பராமரிப்புப்படி அவர்களது சேமிப்புக் கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படுகிறது.

கல்விக் கட்டணம் கல்லூரிகளின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் (Electronic Clearance Service) மூலம் வழங்கப்படுகிறது.

**சுயநிதிக் கல்லூரிகள் (Self Finance Colleges)**

சுயநிதிக் கல்லூரிகளில் (Self Finance College) பயிலும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை சம்மந்தப்பட்ட விவரங்கள் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரால் பரிந்துரைக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட கல்வித்துறை தலைவர்களால் (HODs) ஒப்பளிப்பு செய்யப்பட்டபின், பராமரிப்புப்படி மாணவர்களது சேமிப்புக் வங்கிக் கணக்கிலும் கல்விக் கட்டணம் கல்லூரிகளின் சேமிப்புக் வங்கிக்கணக்கிலும் Electronic Clearance Service (ECS) மூலம் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தால் வழங்கப்படுகிறது.

**பதினோராம், பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிறுவனம் தொழிற் பயிற்சி பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான கல்வி உதவித்தொகை**

**Head of Account – SA1224 / KM 1228 / SA 1223 / JZ 1222 / AV 1220**

பதினோராம் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிறுவனம் தொழிற் பயிற்சி பள்ளிகளில் (11th, 12th, Private Industrial Training Institute / Industrial School) பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களுக்கு பராமரிப்புப்படி அம்மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் தங்காது பயில்வதற்கு ஏற்ப இணைய வழி மூலமாகவே கணக்கிட்டு கல்வி உதவித் தொகையாக மாணவர்களின் சேமிப்புக் வங்கிக்கணக்கில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பின்னரே இயக்குநரகத்தால் Electronic Clearance Service (ECS) மூலம் வழங்கப்படும்.

பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு கணினி பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு கூடுதலாக ரூ.200/– சேர்த்து கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## பொதுவான தகவல்கள்:

- போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய மாணவர்கள் சுயநிதி கல்லூரிகளில் (Self Finance Colleges) சேர்க்கை பெறும் பொழுது மாணவர்களது ஜாதிச் சான்றிதழ் மற்றும் பெற்றோர் / பாதுகாவர் ஆண்டு வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய மாணவர்களிடமிருந்து **கல்விக் கட்டணம் மட்டும்** (Tuition Fee) வசூலிக்காமல் சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.

- மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அரசு, அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்கள், மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் பதிவுசெய்து அனுப்பும் கட்டண விவரங்களை (Fee Structure of Special Fee, Library Fee, Lab Fee, Sports Fee, Enroll Fee, Exam Fee etc) சரிபார்த்து ஒப்புதல் அளித்த பின்னரே கல்வி நிறுவனங்கள் இணைவழியில் மாணவர்களின் விவரங்களை பதிவு செய்ய இயலும்.

- நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கான கல்வி கட்டணங்கள் அரசு கல்வி கட்டண நிர்ணய குழுவினால் கல்வி கட்டணம் நிர்ணயிக்கப்படாததால் அரசு / அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவது போலவே வழங்கப்படவேண்டும்.

- பராமரிப்புப்படி மாணவர்கள் எடுக்கும் பிரிவு மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் தங்காது பயில்வதற்கு ஏற்ப இணைய வழி மூலமாகவே கணக்கிட்டு வழங்கப்படும்.

- சேர்க்கை பெறும் பொழுது பெற்றோர் / பாதுகாவர் ஆண்டு வருமான வரம்பிற்குள் இருப்பின் அம்மாணவர் அவர் எடுக்கும் பிரிவில் படித்து முடிக்கும் வரை போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவராவார். **ஒவ்வொரு ஆண்டும் புதிதாக வருமானச் சான்றிதழ் பெறத்தேவையில்லை.**

- கல்லூரியில் சேரும்போது ஆறு மாத காலத்திற்குள் பெற்றோர் / பாதுகாவர் ஆண்டு வருமானச் சான்றிதழ் பெறப்பட்டவர்கள் மட்டுமே கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவராவார். வருமானச் சான்றிதழ் துணை வட்டாட்சியர் / அதற்கு மேல்நிலை அலுவலர்களிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

- ஆதி திராவிடர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களாக இருப்பின் சாதிச் சான்றிதழ் வட்டாட்சியர் / அதற்கு மேற்பட்ட அலுவலரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

- பழங்குடியினர் நல மாணவர்களாக இருப்பின் ஜாதிச் சான்றிதழ் வருவாய் கோட்ட அலுவலர் / அதற்கு மேற்பட்ட அலுவலரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

- பெற்றோர் / பாதுகாவலர் மாநில அரசு பணியாளராக இருப்பின் அவர்களது ஊதியத்தை கணக்கிடும்பொழுது அகவிலைப்படியை கழித்துவிட்டு ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருப்பின் மாநில அரசு கல்வி உதவித்தொகை பெற தகுதியுடையவராவார். மேற்கூறிய மத்திய / மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பக்கவாட்டு நுழைவு மூலம் ( Lateral Entry) பயிலும் மாணவர்களுக்கும் பொருந்தும்.

- ஆதார் எண் செயலாக்கத்தில் உள்ளதால் மாணவர்களின் சரியான ஆதார் எண்ணை பெற்று இணையவழியில் பதிவு மேற்கொள்ளும்படி அனைத்து நிறுவனங்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கல்லூரிகள் இணையவழியில் பதிவு செய்யப்பட வேண்டிய வழிமுறைகள்

- கல்லூரிகளுக்கான URL (Uniform Resource Locator) – **http://escholarshipdr.tn.gov.in/edistrict_adw/login.jsp**

- பள்ளிகள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்பயிற்சி பள்ளிகளுக்கான (School, Private ITI & Industrial School) URL (Uniform Resource Locator) - **http://escholarshipdr.tn.gov.in/edistrict_adwhsc/login.jsp**

- கல்லூரிகளின் சேமிப்பு வங்கிக் கணக்கு எண். ஒரு முறை தான் பதிவு செய்ய அனுமதிக்கப்படும். மறுமுறை மாற்ற இயலாது. மறுமுறை மாற்ற வேண்டும் என்றால் சென்னை – 5, ஆதி திராவிடர் நலத்துறைக்கு கோரிக்கை வழங்க வேண்டும். வங்கி கணக்கு மாற்றுவதற்கான காரணத்தையும் ஏற்கனவே உள்ள வங்கியில் வங்கிக் கடன் ஏதும் இல்லை என்ற சான்றிதழ் (No due certificate) வழங்கப்பட வேண்டும்.

- சேமிப்பு வங்கிக் கணக்கு எண் பதிவேற்றம் இணையவழியில் தனித்த எண். (unique) உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் ஒரே நிர்வாகத்தில் வெவ்வேறு இடங்களில் உள்ள கல்லூரிகளுக்கு ஒரே சேமிப்பு வங்கி கணக்கு எண். பதிவேற்றம் செய்ய வழிவகை இல்லை. எனவே ஒரே நிர்வாகத்தின் கீழ் உள்ள வெவ்வேறு இடங்களில் உள்ள

கல்லூரிகளுக்கு வெவ்வேறு சேமிப்பு வங்கி கணக்கு எண்களை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- சேமிப்பு வங்கி கணக்கிற்கான சரியான MICR NO. & IFSC No. குறிப்பிடப்படவேண்டும். தவறான எண்ணை பதிவு செய்தால் அடுத்த கட்டத்திற்கு பதிவு செய்ய இயலாது. எனவே சரியான எண்ணை பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- கல்லூரிகள் சரியான தொலைபேசி எண், அலைபேசி எண், நிகரி எண் மற்றும் மின்அஞ்சல் முகவரியை பதிவு செய்யப்பட வேண்டும்.

- கல்லூரிகளுக்கான விவரங்கள் அனைத்தும் இணையவழியில் பதிவு செய்யப்பட்டால் தான் அடுத்த நிலைக்கு கல்லூரிகளால் மாணவர்களின் விவரங்களை பதிவு செய்ய இயலும்.

- முதலாம் ஆண்டு மற்றும் மற்ற ஆண்டுகளில் சுயநிதி கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் புதியதாக பதிவு மேற்கொள்ளபடும்பொழுது (only for fresh students) மாணவர்களின் ஜாதிச் சான்றிதழ் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானச் சான்றிதழ் மற்றும் இணையவழி மூலம் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினையும் ஒவ்வொன்றாக 125 kb அளவில் Scan செய்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- சுயநிதி கல்லூரிகள் புதுப்பித்தல் (Renewal) விண்ணப்பங்களை scan செய்து upload செய்ய வேண்டாம்.

- அரசு, அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்கள், நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் மற்றும் மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் புதியது (Fresh) மற்றும் புதுப்பித்தல் (Renewal) ஆகிய எவ்வித விண்ணப்பங்களையும் scan செய்து upload செய்ய வேண்டாம்.

- முதலாம் ஆண்டு, பொறியியல், பல்தொழிற்நுட்ப (Engineering / Polytechnic) கல்லூரிகளில் நேரிடையாக இரண்டாம் ஆண்டு சேர்ந்து (Lateral Entry) பயிலும் மாணவர்களின் விவரங்களை பதிவு செய்யும்பொழுது முதலில் சென்னை – 25, தொழில் நுட்ப கல்வி இயக்ககத்திலிருந்து (DOTE – Professional and DOTE – Polytechnic) தனிப்பட்ட அடையாள எண். (Unique ID No.) பெற்று பதிவு செய்யப்பட வேண்டும் . Unique ID பெற்றால் தான் பதிவு செய்ய இயலும்.

- மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களுக்கு (SCC) பதிவு மேற்கொள்ளும் பொழுது துணை ஜாதி (sub-caste) இல்லை.

- மாணவர்களின் விவரங்களை Renewal செய்யும் முன் முந்தைய ஆண்டில் தகுதியற்ற மாணவர்கள் (long absent, discontinued) இணையவழியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் நடப்பு கல்வியாண்டிற்கு அவர்களை நீக்கிவிட்டு (Delete) மற்ற மாணவர்களை நடப்பு ஆண்டிற்கு Renewal செய்யப்படவேண்டும்.

- முந்தைய ஆண்டின் ஒப்பளிக்கப்பட்ட கல்வி உதவித் தொகை ஏதேனும் காரணத்திற்காக உதாரணமாக நீண்ட விடுப்பு (long absent) ரத்து செய்யப்படட வேண்டும் எனில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கல்வி நிறுவனங்கள் இருக்கும் அந்தந்த மாவட்ட கரூவூல கணக்கு அலுவலகத்தில் பின் வரும் அரசு கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டு, செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டின் நகலினை சென்னை – 5, ஆதிதிராவிடர் நல இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்டுகிறார்கள்.

**Head of Account:**

“2225 Welfare of SCs, STs & OBCs 01 Welfare of SCs - 911 Deduct Recoveries of over payments AA Deduct Recoveries of over payments controlled by the Director of AD&TW Dept - 77 Deduct recoveries 02 Remittance of over payments / Remittance of excess drawls”
(D.P.Code: 2225 01 – 911 – AA – 7720)

நடப்பு கல்வியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட கல்வி உதவித் தொகையினை அதே ஆண்டில் ரத்து செய்யப்பட வேண்டும் எனில் ஆதிதிராவிடர் நல இயக்கக மின் அஞ்சல் முகவரிக்கு cadw.tn@nic.in மாணவர்களின் விவரங்களை அனுப்பினால் எந்த கணக்கு தலைப்பின் கீழ் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய விவரத்தினை உடன் தெரிவிக்கப்படும். தெரிவிக்கப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் அத்தொகையினை செலுத்திவிட்டு செலுத்தப்பட்ட செலான் நகலினை சென்னை – 5, ஆதி திராவிடர் நல இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- Proceedings not to generate for single student. கல்வி நிறுவனங்கள் Principal Login ல் இருந்து submit செய்யும்போது முடிந்தவரை மொத்தமாக submit செய்யவும். ஒவ்வொரு மாணவராக submit செய்வதை தவிர்க்கவும். இதனால், Batchகள் மற்றும் Proceedings எண்ணிக்கை அதிகரிக்கிறது.

- மாணவர்களின் சேமிப்பு வங்கி கணக்கு எண். செயல்பாட்டில் உள்ளதா என (Operative Account) ஊர்ஜிதம் செய்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டும். வங்கிக் கணக்கு எண்கள் முழுவதையும் பதிவு செய்ய வேண்டும்.

- அந்தந்த மாணவர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கு எண்ணை மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- கட்டாயமாக (Mandatory) உள்ள இடங்களில் அனைத்து விவரங்களை பதிவு செய்தால் தான் அடுத்த நிலைக்கு பதிவுகள் மேற்கொள்ள இயலும்.

- கல்லூரியின் அலுவலக கடவுச்சொல் அல்லது முதல்வர் கடவுச்சொல் செயலாக்கத்தில் இல்லாமல் மீட்டமைக்க (Reset) செய்யப்பட வேண்டும் எனில் cadw.tn@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, கல்லூரிக்கு இணைவழி மூலம் பதிவு செய்ய வழங்கப்பட்ட பயனர் குறியீட்டு எண், கல்லூரி பெயர், மாவட்டம் பெயர் மற்றும் முதல்வர் அல்லது தாளாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதத்துடன் குறியீட்டு எண் மீட்டமைக்க (Reset) செய்யப்பட வேண்டிய விபரம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- இணையவழியில் பதிவு மேற்கொள்ளும் பொழுது ஏதேனும் இடர்பாடுகள் அல்லது சந்தேகங்கள் ஏற்பட்டால் **044 – 28511021** தொலைபேசி எண்ணை அணுகவும். அல்லது cadw.tn@nic.in என்ற மின்அஞ்சல் முகவரிக்கு கல்லூரி பெயர், மாவட்டம், பயனர் குறியீட்டு எண். இடர்பாடுகளின் விவரத்தை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும்.

- ECS Return Cases : இயக்குநரகத்திலிருந்து ECS மூலம் அனுப்பப்படும் மாணவர்களுக்கான பராமரிப்புப்படி சரியான வங்கிக்கணக்கு விவரம் இல்லையெனில், ECS Reject ஆகும். அவ்வாறு ECS Reject ஆகும் மாணவர்களின் விவரங்கள் கல்வி நிறுவனங்களின் (முதல்வர் குறியீட்டு எண்ணிற்கு) Principal Loginல் இருக்கும். அதில் Re-submissionஐ தேர்வு செய்து சரியான வங்கிக்கணக்கு விவரங்களை பதிந்து Resubmit செய்து அந்த Batchஐ Forward செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- கல்வி நிறுவனங்களின் பெயர்கள் தவறாக இருப்பின் உடனடியாக இயக்குநரகத்திற்கு தெரிவித்து சரிசெய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

- கல்வி நிறுவனங்களிலிருந்து இயக்குநரகத்திற்கு அனுப்பும் மின்னஞ்சல்களில் கல்வி நிறுவனங்களின் குறியீட்டு எண்ணுடன் ( Institution User ID for Scholarship) அனுப்பப்படவேண்டும்.

- புதியதாக பயனர் குறியீட்டு எண். பெறயிருக்கும் கல்லூரிகள் பின்வரும் விவரங்கள் cadw.tn@nic.in என்ற மின் அஞ்சல்முகவரிக்கு பின்வரும் விவரங்களை அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- மாணவர்களின் விவரங்களை இணையவழியில் பதிவு செய்யும்போது மாணவர்களின் பெயர், முகவரி, பாடப்பிரிவு, பயிலும் வருடம், வங்கிக்கணக்கு விவரங்கள் ஆகியவற்றை சரியாக பதிவுசெய்யப்பட வேண்டும். மாணவர்கள் சம்மந்தப்பட்ட விவரங்களை இணையவழியில் பதிவு செய்வதில் ஏதேனும் குறைபாடு இருப்பின், சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனங்களே முழு பொறுப்பாகும்.

**<u>FOR CREATION OF NEW USER ID</u>:**

Name of the institution :

District

Name of the Affiliation University :

Whether the institution is Govt./Govt.aided/ :
Central Govt./Self Finance/Deemed University/
University

Institution email ID :

Institution Mobile No. :

Scanned copy of affiliation / approval order :

**TO ADD NEW COURSE:**

| | | |
|---|---|---|
| Name of the institution | : | |
| District | : | |
| User ID No. | : | |
| Details of courses with duration and branch | : | |
| Scanned copy of Affiliation / approval order | : | |